## ஆய்வுப்பொருள்: இரண்டு:-
## இறையருளை வழங்கும் அருளடையாளங்கள்

11

### 2.3. நலம் தரும் நம் இறைவன்

**பாடல்**

மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா
மன்னிப்பு மன்னிப்பு தாருமே இறைவா (2)

1. ஆண்டவர் ஆன்மாவை விரும்புகிறார்
மாண்டிட்ட ஆன்மாவைத் தேடுகிறார்
அண்டிடும் பாவிக்கு அருளுகின்றார் - நேரில்
வேண்டிடும் துரோகிக்கு இரங்குகின்றார்.

2. பன்றிகள் மேய்த்தவன் தவிடு உண்டான்
தன் தந்தை அன்பினைக் கனவு கண்டான்
மன்னிப்புக் கேட்டங்கே ஓடி வந்தான்
தந்தை மன்னித்து மகனாக அணைத்து ஏற்றார்.

3. குற்றங்கள் இல்லையே என்று சொன்னால்
நம்மைத்தான் ஏமாற்றி நலிந்திடுவோம்
குற்றங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தால் - தேவன்
குற்றத்தை மன்னித்து வாழ்வளிப்பார்.


(பரமனுக்குப் பண்ணிசை # 242)

- இப்பாடலைத் தியானித்து, உமது மனதில் எழும் கருத்துக்களை பயிற்சி நூலில் எழுதவும்.

ஒரு கிறிஸ்தவனுக்கு அவனது வாழ்வு முழுவதுமே
மனமாற்றத்தின் காலமாக அமைய வேண்டும்.


இலவச விநியோகத்திற்காக

தான் பாவி என ஏற்றுக்கொண்டு அதற்கு மன்னிப்புப் பெற்று இறைவனிடம் மீண்டும் திரும்பி வருவதால் ஆன்மீக சுகத்தை அளிக்கின்ற இவ்வருளடையாளம் மனமாற்றத்தின் அருளடையாளம் என அழைக்கப்படுகிறது.






இலவச விநியோகத்திற்காக

## மனம்மாற திருமுழுக்கு யோவானின் அழைப்பு

பாவமன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்குப் பெறுங்கள் என்று யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகள் அனைத்துக்கும் சென்று அவர் பறைசாற்றி வந்தார்.

(லூக். 3:3)

### பயிற்சி நூலில் எழுதவும்

பாவத்தினால் துண்டிக்கப்பட்டிருக்கும் இறை உறவை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உம்மால் செய்யக்கூடியவற்றை எழுதுக.

- **இக்குழுச் செயற்பாட்டை செய்வோம்:**

எமக்கு பிழை செய்தவர்களை மன்னிப்பதன் மூலமே எமது தவறுகளும் மன்னிக்கப்படும். அவ்வாறு எம்மால் பிறரை மன்னிக்க முடியாவிட்டால் எமக்கு இறைவனிடம் மன்னிப்புக் கேட்கும் உரிமை அற்றுப் போகிறது. நாம் எமது பிழைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.



இலவச விநியோகத்திற்காக

எமது → சகோதரருக்கு / சமூகத்திற்கு / இறைவனுக்கு

எதிராக மனதாலும் சொல்லாலும் செயலாலும் கடமையில் தவறியதாலும் முழு விருப்பத்துடன் இறைக்கட்டளையை மீறும் முறையில் நடக்கும் அனைத்துப் பாவங்களுக்கும் இறைத்தந்தையிடம் மன்னிப்புக் கேட்போம்.

நீர் கட்டிக்கொண்ட அனைத்துப் பாவங்களையும் ஒரு தாளில் எழுதி, அப்பாவங்களுக்காக இறைவனிடம் மன்றாடி, அப்பிழையைச் செய்யமாட்டேன் என உறுதிசெய்து கொள்ளவும். பின்னர் நீர் எழுதிய கடதாசியை சிறுசிறு துண்டுகளாகக் கிழித்து நெருப்பில் போடவும். உமக்கு இப்போது மன அமைதி ஏற்படும். பரலோக மந்திரமும், அருள் நிறை மரியே மூன்று முறையும், ஒரு திரித்துவப் புகழும் கூறி இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கவும்.

அதன்பின் குருவானவரிடம் சென்று நல்ல பாவ அறிக்கை (பாவசங்கீர்த்தனம்) செய்யவும்.

## ஒப்புரவு வழங்குகையில் குருவானவர் சொல்லும் பாவமன்னிப்புச் செபம்

''எல்லாம் வல்ல இரக்கம் நிறைந்த
தந்தையாகிய இறைவன்,
தம் திருமகனின் இறப்பினாலும்,
உயிர்ப்பினாலும் உலகின் பாவங்களைப்
போக்கிய இறைவன் பரிசுத்த ஆவியின்
வல்லமையினால், பாவங்களைப் போக்க,
திருச்சபைக்கு வரமளித்த இறைவன் உன்
பாவங்களிலிருந்து விடுவித்து உனக்கு
சமாதானத்தையும், அமைதியையும்
அருள்வாராக. நானும் பிதா, சுதன், பரிசுத்த
ஆவியின் பெயரால் உன் பாவங்களிலிருந்து
உன்னை விடுவிக்கிறேன்'' ஆமென்.



இலவச விநியோகத்திற்காக

நாம் பாவம் செய்வது இறைவனுக்கும் மனிதருக்கும் எதிராக என்பதால், எமது பாவங்களை கடவுளுக்கும் சமூகத்துக்கும் இடைநிலையாளராக செயற்படும் குருவின் முன்னிலையில் அறிக்கையிட வேண்டும்.

> அவரது வலக்கையைப் பற்றிப் பிடித்துத் தூக்கிவிட்டார். உடனே அவரது காலடிகளும் கணுக்கால்களும் வலுவடைந்தன. அவர் குதித்தெழுந்து நடக்கத் தொடங்கினார் துள்ளி நடந்து, கடவுளைப் போற்றியவாறே அவர்களோடு கோவிலுக்குள் சென்றார்.
>
> (தி.ப. 3:7-8)

- நமது பாவத்திற்காக உண்மையான உளத்துயரோடு மனம் மாறியவர்களைத் தேடிப்பார்த்து அவர்களது பெயர்களை பயிற்சி நூலில் எழுதுக.

நல்ல பாவ அறிக்கை செய்வதற்கு ஒரு விசுவாசி ஐந்து படிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென நீங்கள் அறிந்திருப்பீர்கள் (தரம் 10 பாடநூல் பக்கம் 55). இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பின் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி இவ் ஐந்து படிமுறைகளையும் மூன்று படிமுறைகளுக்குள் அடக்கியுள்ளது.

1. பாவத்திற்கு உண்மையாக மனம் வருந்தி, இனிமேல் ஒருபோதும் பாவம் செய்யமாட்டேன் எனத் தீர்மானித்தல்.
2. பாவங்களைக் குருவிடம் அறிக்கையிடல். பாவியென ஏற்றுக்கொண்டு அப்பாவங்களுக்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுதல். மனம் வருந்துதல், அறிக்கையிடல் வழியாக நாம் பாவத்தை விட்டுவிடுவோம்.
3. குருவானவர் வழங்கும் பரிகாரச் செயலை நிறைவேற்றுதல். செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக, ஆன்மீகக் குணப்படுத்தலை வழங்கக் கூடியதாக அபராதம் வழங்கப்படுகிறது. அபராதம் தண்டனையல்ல. மாறாக, அது ஒரு குணமளிக்கும் செயலாகும். பாவிகளாகிய நாம் அவரோடு ஒன்றிணைய சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.


இலவச விநியோகத்திற்காக

பாவமன்னிப்பை விளக்கும் பொழுது, ‘‘பாவத்தை அழித்தல்’’ என்ற பதத்தை தூய அகுஸ்தீனார் பயன்படுத்தியுள்ளார் என கத்தோலிக்க திருச்சபையின் திருமறைநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கிறிஸ்துவைப்போல உருவாகுவதற்கு ஒப்புரவு அருளடையாளம் உதவுகின்றது. எமது பாவங்களுக்குரிய தண்டனையை கிறிஸ்து நிறைவேற்றியுள்ளார்.**

**கிறிஸ்துவுடைய பாஸ்கா மறைபொருளின் பலன்களினால் நாம் இறைவனோடு ஒப்புரவாகும் வரத்தைப் பெற்றுக்கொண்டோம்.**

மேலதிக அறிவுக்காக:

2அரசர் 5:1-19.

யோவேல் 1:13-20.

யோவான் 8:1-11.

யோவான் 9:6-7.

தோபித்து 11:7-14.

**மாணவர் செயற்பாடு:**

1. பாவங்களை மன்னிக்க தமக்கு அதிகாரம் உண்டென்பதைக் காட்ட இயேசு செய்த புதுமைகள் மூன்று எழுதுக.
2. ஒப்புரவு அருட்சாதனம் மூலம் உம்மில் ஏற்பட்ட மாற்றம் என்ன?
3. லூக்கா 6:37ம் வசனத்தை வாசித்து உமது மனநிலையில் ஏற்பட்ட மாற்றத்தை எழுதுக.

**ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தடைகள்.**

- பிழைகளுக்குக் காரணம் காட்டி சந்தர்ப்பத்தைத் தவற விடுதல்.
- தாம் பாவம் செய்யவில்லையென நினைத்தல்.
- பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுவதற்கு ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறவேண்டுமா என நினைத்தல்.
- தாம் தனியாகப் பாவங்களை இறைவனிடம் நேரடியாகக் கூறி மன்னிப்புப் பெறலாம் என நினைத்தல்.
- திருப்பலியில் மன்னிப்பு வழிபாட்டில் ஒப்புரவாகிக் கொள்ளலாம் என நினைத்தல்.

**உங்கள் வாழ்க்கைக்கு...**

எல்லாம் வல்ல இறைவா!

நான் செய்த பாவங்களை நினைத்து தினமும் மனம் வருந்தவும், 'ஒப்புரவு' திருவருட்சாதனத்தின் மூலம் உம்மிடம் திரும்பி வரவும், உமது மந்தையை விட்டுப் பிரிந்திருப்போர் மீண்டும் நல்லாயனாகிய உம்மிடம் வந்து சேர்ந்து, உமது வழிகளைப் பின்பற்றி வாழவும் அருள் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**வருடத்திற்கு ஒரு முறையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வாயாக.**

**(திருச்சபையின் இரண்டாம் கட்டளை)**



இலவச விநியோகத்திற்காக